# ஆயுர்வேத மருத்துவம்
# AYURVEDIC MEDICINE

## ஆயுர்வேத மருந்து என்றால் என்ன?

ஆயுர்வேதா என்ற வார்த்தை இரண்டு சமஸ்கிருத வார்த்தைகளால் ஆனது அதன் பொருள் “வாழ்க்கையின் தகவல்”.

ஆயுர்வேத மருந்து இந்தியாவிற்குள் பழமையான ஆன்மீக மரபு வழியில் ஆரம்பித்ததாகும்.அது உடம்பு, மனம், புலன்கள்,மற்றும் ஆன்மாவை நல்ல முறையில் பேணி வளர்க்கிறது.அது தியானம், ஆன்மீகநிலை,மற்றும் ஊட்ட உணவை தனிப்பட்ட வழக்கமாக பயன்படுத்துபவர்களுக்கு அவர்கள் எதிர்ப்பு சக்தி வலிமையடைய முயற்சி செய்கிறது.ஆயுர்வேதம் மூலிகைகளால் செய்யப்படும் மருத்துவம், மரபுவழி சீன மருத்துவத்தை போன்றது.(பார்க்க பேக்ட் க்ஷீட் 704)

மனம் மற்றும் உடம்பிற்கான ஆழ்ந்த தொடர்பை பேணி வளர்ப்பதின் மூலம் ஆயுர்வேத பயிற்சியாளர்கள் நன்றாக இருப்பது மற்றும் நோய் வராமல் தடுப்பதை அதிகப்படுத்துகிறார்கள். அவர்கள் உண்மையான ஆரோக்கியம் என்பது, அதிகமாக நோய் இல்லாமல் இருப்பது என்று நம்பினார்கள்.உண்மையான ஆரோக்கியம் என்பது “முழுவதும் ஆரோக்கியமான” நிலை,இது, நோயாளிகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாத உடல் அல்லது மனவலிமையை நன்றாக சக்தியுடனும் மற்றும் சராசரியாகவும் வைக்கிறது.

## ஏன் ஹெச்ஐவி உள்ள மக்கள் ஆயுர்வேத மருந்துகளை உபயோகிக்க வேண்டும்?

ஹெச்ஐவி உள்ள மக்கள் தங்களுக்கு முழு ஆரோக்கியம் மற்றும் உடல் சக்தியின் அளவு முன்னேற்றமடைய ஆயுர்வேத மருத்துவர்களை உதவுமாறு ஆலோசிப்பார்கள்.

ஆயுர்வேத மருத்துவத்தின்படி ஹெச் ஐவி க்கு உடலின் சக்தியை குறைக்கும் விளைவை ஏற்படுத்தும்.

ஆயுர்வேத மருந்துகள் ஹெச் ஐவி நோயை குணப்படுத்தாது. இருந்த போதிலும், அதிகமான மக்கள் தங்கள் முழு உடல் சக்தி முன்னேற, எதிர்ப்பு சக்தி முன்னேற, மற்ற நோய்கள் வராமல் தடுக்க, அல்லது ஆண்டிவைரல் மருந்துகளின் பக்கவிளைவுகளை எதிர்கொள்ள ஆயுர்வேத மருந்துகள் உதவுவதாக நம்புகிறார்கள்.

## ஆயுர்வேத மருந்துகள் எப்படி நடைமுறை படுத்தப்படுகிறது?

நமது உடல் மூன்று தோக்ஷங்களையும் அல்லது மூன்று வித சக்திகளையும் உபயோகிப்பதாக ஆயுர்வேதம் நம்புகிறது.

- வாதம், இயக்க சக்தி
- பித்தம், ஜீரண சக்தி மற்றும் வளர்சிதை மாற்றம், மற்றும்
- கபம், உராயும் சக்தி

ஆரம்பத்தில் கூறியதைப்போல நோயாளிகள் மூன்று தோக்ஷங்களின் சராசரி விகிதப்படி உறுதியாக உடலின் தன்மையை பொறுத்து மூன்று பிரிவாக பிரிக்கப்படுகிறார்கள்.

மருத்துவர் அவருடைய வாடிக்கையாளரிடம் கல ந்தாலோசித்து மேலும் நடைமுறைப்படி கேள்விகள் கேட்பது, கூர்ந்து கவனித்தல், அனுமானித்தல் போன்றவற்றை செய்வார்.மருத்துவர் நோயாளியின் நாடித்துடிப்பை அறிவது, அவர்களையும் அவர்கள் நாக்கையும் பார்ப்பது, மற்றும் அவர்கள் குரல் ஒளியை கேட்பது ஆகியவற்றை செய்வார்.

மருத்துவர் நோயாளிகளுக்கு சாப்பாடு, உடற்பயிற்சி, ஆன்மீக பயிற்சி அகியவற்றை அவர்களுக்கு தேவைப்படும் அளவு பொருத்தமாக பட்டியல் தயாரிப்பார்.சில நேரங்களில்

இந்த பரிந்துரைகள் விரிவாகவும் இருக்கும்.[அவற்றில் அடங்குவது அதிகாலை பயிற்சிகளை வழக்கமாக்குதல், தூய்மையை முறைபடுத்தல், வழிபாடு அல்லது தியானம், மற்றும் உடற்பயிற்சி.
ஆயூர்வேத மருந்தும் அதன் சொந்த மருந்தையே பயன்படுத்தப்படுகிறது. சில நிறுவனங்கள் தயாரிக்கும் செவன்ப்ராஸ் மற்றும் ரக்தாவர்க் மருந்துகள் ஹெச் ஐவி மக்களுக்காக பயன்படுத்தபடுகிறது, அவை எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க,மற்றும் தொற்றை தடுக்க சூக்க்ஷ்மா த்ரிப்லா மாத்திரைகள்.

## அபாயம் மற்றும் பக்கவிளைவுகள் என்ன?

ஹெச் ஐவி மக்களுக்காக திட்டமிட்டு அவர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட சிகிச்சைகள் நல்ல முறையில் இருந்தாலும்,சில மக்கள் மூலிகை மற்றும் சிகிச்சைகளை பொறுத்துக் கொள்வதில்லை...

ஏதாவது ஆயுர்வேத மருந்துகள் ஹெச் ஐவி மருந்துகளுடன் சேர்ந்து அவற்றை உறிஞ்சி தடை ஏற்படுத்துமா என்று தெரியவில்லை.ஹெச் ஐவி மருந்து எடுத்துக் கொள்வதற்கு முன்னால் அல்லது எடுத்துக் கொண்டபின் சில மணி நேரம் கழித்து எந்த மூலிகை மருந்தையும் எடுத்துக் கொள்ளலாம் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

A project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org

2008ல் இணையதளத்தின் மூலம் வாங்கப்பட்ட 20% மூலிகைப்பொருள்களில் எண்ணும் அளவிற்கு ஈயம், கொடிய நஞ்சு, மற்றும் பாதரசம் இருந்ததால் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அதை எச்சரித்துள்ளது.

**ஆயுர்வேத மருந்துகள் வேலை செய்வதை நாம் எப்படி அறிவது?**

மிகக் குறைந்த முறையான ஆராய்ச்சிகள் ஆயுர்வேதசிகிச்சைக்கு இருக்கிறது.

இருந்தபோதிலும், மக்கள் உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிக்க விரும்பவில்லை என்று தெரிந்தால், அதிக கவனம் எடுத்து கொள்ளுங்கள். யாராகிலும் தங்கள் சிகிச்சை ஹெச் ஐவியை “குணப்படுத்தும்” என்று உரிமையுடன் சொன்னால் எச்சரிக்கையாக இருங்கள்.பார்க்க பேக்ட் ஷீட் 206,எப்படிஹெச் ஐவி/எய்ட்ஸ் ஏமாற்றம் என்று கண்டுபிடிப்பது, மேலும் அதிக விவரங்கள் அறிய .

உங்கள் உதவிக்கு, நீங்கள் ஆயுர்வேத அல்லது மற்ற மாற்று சிகிச்சையை மதிப்பிட. பார்க்க - பேக்ட் ஷீட் 700ல் மாற்று சிகிச்சைகள்.

**நமக்கு மேலும் அதிக விவரங்கள் எங்கு கிடைக்கும்?**

தி ஆயுர்வேதிக் இன்ஸ்டிடியூட்
http://www.ayurveda./ at com:
505/291-9698